## கல்நேவ பிரதேச சபை

## அநுராதபுர மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 06 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜுன் 09 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 11 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கல்நேவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

(அ) மீளாய்வாண்டின் போது திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தில் இருந்து சபைக்கு கிடைத்திருந்த 264 கல்வணய்ஸ் குழாய்களின் பெறுமதியாக ரூபா 292,286 இனை நிதிக் கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மூலதன வருமானம் ரூபா 43,284,800 தொகை மற்றும் ரூபா 43,217,552 தொகையும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது நூலகத்திற்கு கிடைத்திருந்த 300 புத்தகங்களின் பெறுமதி ரூபா 59,139 இனை கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் கடன்பட்டோர் மீதி ரூபா 1,479,966 உம் மற்றும் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 27,849,017 உம் காட்டப்பட்டிருந்ததுடன் அவற்றிற்கான காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது செயற்பாட்டு மிகை ரூபா 972,385 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் செயற்பாட்டு பற்றாக்குறை ரூபா 306,963 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

----------------------------------

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

------------------------------------------------------------------------------------------------------------------------------

செயலாளரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பிட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (i) | வீதவரி | 1,886 | 1,494 | 632 |
| (ii) | வாடகை | 1,835 | 1,568 | 442 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 901 | 835 | 111 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 1,627 | 454 | 1,173 |

2.2.2 விளம்பர அறிவித்தல் பலகை கட்டண அறவீடு

-----------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது சபையின் அதிரகாரப் பிரதேசத்தில் விளம்பர அறிவித்தல் பலகைகளுக்காக அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்வதற்காக சபைத் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டு அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. எனினும் ஆண்டின் போது ரூபா 196,025 இற்கான அறிவித்தல் பலகை கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

2.2.3 கழிவுப் பொருட்கள் வரி

-----------------------------------------

நீண்ட காலமாக முன்கொண்டு வரப்பட்டு வரும் ரூபா 631,625 இற்கான நிலுவை கழிவுப் பொருட்கள் வரி தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 159(2) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 கடை வாடகை

-------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 226,100 இனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.5 தொலைபேசி டவர் கட்டணம்

---------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிறுவப்பட்டிருந்த 06 தொலைபேசி செலுத்துகை டவர்கள் தொடர்பாக இலங்கை குடியரசின் 2009 ஏப்ரல் 17 திகதிய இலக்கம் 1597/08 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டுப் பௌதீக வளங்கள்

---------------------------------------------------------------------------------------------------------------

பல வருடங்களுக்கு முன்னர் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,016,469 தொகை பெறுமதியான உபகரணங்கள் மற்றும் கொங்கிரீட் கலவை இயந்திரம் பயன்படுத்தப்படாமல் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது.

3.2 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------------------------------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 132(ஓ) இன் பிரகாரம் தனிப்பட்ட நன்கொடையாக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 68,487 இற்கான செலவுகளுக்காக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை.

3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

-------------------------------------------------

(அ) நீண்ட காலத்திற்கு முன்னர் சபைக்கு கிடைத்திருந்த டிபர் வண்டி மற்றும் பவுஸர் (அதிகாரம் 203) மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவு 2(1) இன் பிரகாரம் பதிவு செய்யப்படாமல் ஓட்டப்பட்டுள்ளது.

(ஆ) 2009 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை செலுத்த வேண்டியிருந்த நிர்மாண வேலைகளுக்கான தடுத்து வைத்தல் பணம் மற்றும் பகுதிக் கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 1,849,698 தொகை தொடர்பாக ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்படாமல் சபையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கை மகாவலி அதிகார சபை சபைக்கு உரித்தாக்கியிருந்த 28.7 ஏக்கர் அளவினைக் கொண்ட ரூபா 4,472,000 பெறுமதியான 24 மயானங்களின் உரிமை தொடர்பாக 2006 நவம்பர் 14 திகதிய உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்று நிருப இலக்கம் 09 இன் பிரேரணைகள் மற்றும் விதப்புரைகளை செயற்படுத்தியிருக்கவில்லை.

3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

---------------------------------------------

2001 ஆண்டின் போது கல்நேவ வாராந்த சந்தை குத்தகைக்கு எடுத்தவரினால் செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 116,640 தொகையினை செலுத்தத் தவறியமையால் வழக்குத் தாக்கல்

செய்யப்பட்டிருந்த போதிலும் 2005 ஆண்டு முதல் பிரதிவாதியை கண்டு பிடிக்க முடியாமையால் ரூபா 116,640 அறவீடு செய்வதற்கு முடியாதுள்ளது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) அகக் கட்டுப்பாடு

(ஆ) அகக் கணக்காய்வு

(இ) கணக்கீடு

(ஈ) வருமான நிருவாகம்

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஊ) மனித வள முகாமைத்துவம்